# வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—மலர்விழி

தேதி 14.8.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

80-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று மாலை 7 மணிக்கு, வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம், நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

சுதந்திர தினமான நாளை, பிரதமர் திரு நரேந்திர மோடி டெல்லி செங்கோட்டையில் இருந்து, சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு தலைமை ஏற்கிறார்.

புதுச்சேரியில் நாளை காலை, கடற்கரை சாலையில் நடைபெறும் சுதந்திர தின விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அணி வகுப்பு மரியாதைகளை ஏற்றுக் கொள்கிறார்.

வீராம்பட்டிணத்தில் இன்று நடைபெற்ற செங்கழுநீர் அம்மன் ஆலய தேர் திருவிழாவை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர், வடம் பிடித்து தொடக்கி வைத்தனர்.

## முர்மு-உரை

80-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று மாலை, நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். குடியரசு தலைவரின் இந்தி மற்றும் ஆங்கில உரைகள், இன்று மாலை 7 மணிக்கு ஆகாஷ்வாணியின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாகும். தூர்தர்ஷன் தொலைக்காட்சியின் அனைத்து

அலைவரிசைகளிலும், குடியரசு தலைவரின் உரை இடம் பெறும். தூர்தர்ஷனில் குடியரசு தலைவரின் இந்தி மற்றும் ஆங்கில உரையைத் தொடர்ந்து, அதன் பிராந்திய மொழி வடிவங்கள் இடம் பெறும். குடியரசு தலைவர் உரையின் பிராந்திய மொழி பெயர்ப்பை, ஆகாஷ்வாணி, இன்று இரவு 9.30 மணிக்கு ஒலிபரப்பும்.

## மோடி-சுதந்தி□ம்

80-ஆவது சுதந்திர தினமான நாளை, பிரதமர் திரு நரேந்திர மோடி, டெல்லி செங்கோட்டையில் இருந்து, சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு தலைமை ஏற்கிறார். விழாவின் போது 21 குண்டுகள் முழங்க, மூவர்ணக் கொடி ஏற்றப்பட உள்ளது. இந்திய விமானப் படையின் Mi-17 விமானங்கள் மூலம் விழாப் பகுதி மீது, மலர்களை சொரியவும், ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து பிரதமர் திரு நரேந்திர மோடி, டெல்லி செங்கோட்டை கொத்தளத்தில் இருந்து நாட்டு மக்களுக்கு உரையாற் உள்ளார்.

சுதந்திர தின விழா குறித்து ஒரு செய்தி தொகுப்பு....... (வாய்ஸ்)

இவ்வாண்டு சுதந்திர தின விழா, வந்தே மாதரம் தேச பக்திப் பாடலின் 150- ஆண்டுகளைக் குறிக்கும் வகையிலும், விக்சித் பாரத் இலக்கை நோக்கிய இந்தியாவின் பயணத்தில், ஆற்றல்மிகு இளையோர் சக்தியின் முக்கிய பங்களிப்பைக் கொண்டாடும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளை, முதல் முறையாக, செங்கோட்டைக் கொண்டாட்டங்களின் போது, வந்தே மாதரம் தேசப் பக்திப் பாடல் இசைக்கப்பட உள்ளது. தேசிய மாணவர் படையினர் மற்றும் மை-பாரத் தொண்டர்கள், தேசிய கீதத்தைத் தொடர்ந்து, வந்தே மாதரம் பாடலை இசைக்க உள்ளனர். தேசிய மாணவர் படையின் முப்படைப் பிரிவுகளைச் சேர்ந்த 2 ஆயிரத்து 500 மாணவ-மாணவிகளும், மை பாரத் தொண்டர்களும் இதில் பங்கேற்க உள்ளனர். வாழ்வின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 5 ஆயிரம் பேர் விழாவை நேரில் காண, சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டள்ளனர். பிரதமரின் விஸ்வகர்மா திட்டக் கலைஞர்கள், முத்ரா திட்டத்தின் கீழ் பயன் பெற்ற பெண்

தொழில் முனைவோர், ஸ்வாநிதி திட்டத்தின் கீழ் பயன் பெற்ற சாலையோர வியாபாரிகள், மற்றும், பாரத் டாக்சி டிரைவர்கள் இதில் அடங்குவர். சுதந்திர தின விழாவை ஒட்டி தலைநகரில், போலீசார், விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துள்ளனர். பாதுகாப்பு படையினர் 15 ஆயிரம் பேர், பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். செங்கோட்டை பகுதியில், 5 ஆயிரம் சிசிடிவி கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன. சுதந்திர தினத்தை ஒட்டி, மக்களிடையே தேசப் பற்று மற்றும் கொண்டாட்ட உணர்வை தூண்டும் வகையில், நாடு முழுவதும், முக்கியமான 343 இடங்களில், பேண்ட் வாத்திய நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பிரிவினை

பிரிவினைக் கால கொடுமைகளை நினைவு கூரும் நாளான இன்று, இத்தகைய கொடுமைகளால் உயிர் இழந்தவர்கள், மற்றும், பெரும் துயருக்கு ஆளானவர்களுக்கு, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, அஞ்சலி செலுத்தி உள்ளார். 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 14-ஆம் நாள், வரலாற்றின் மிக கொடூரமான அத்தியாயத்திற்கு, சாட்சியமாகவே நீடிப்பதாக, உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா சமூக ஊடகத்தில் கூறி உள்ளார். பிரிவினையின் போது, வீடுகள் சொத்துக்கள் மற்றும் அன்பானவர்களை விட்டுப் புலம் பெயர நேர்ந்த லட்ச கணக்கிலான மக்களின் துயரங்களை, இன்றைய இளைஞர்களுக்கு எடுத்துக் கூறுவதன் மூலம், மறுபடியும் நாட்டை துண்டாட முயலும் சக்திகள் ஒருபோதும் வெற்றி பெற முடியாது என்பதை உறுதிப்படுத்துவதே, பிரதமர் திரு நரேந்திர மோடி அரசின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் உள்ளிட்டவர்களும், சமூக ஊடகத்தில் அஞ்சலிப் பதிவு வெளியிட்டனர்.

## அமித் ஷா-போதை

போதை மருந்து கடத்தலில் ஈடுபடுவோர், வெளிநாடுகளுக்கு தப்பினாலும் அவர்களைத் தேடிப் பிடிக்க, அரசு அயராத முயற்சிகளை

மேற்கொண்டு வருவதாக, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். போதை மருந்துக் கடத்தல் புள்ளி **வீரேந்திர சிங் பசோயா**, இன்று அதிகாலை, டெல்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது, **போதைப் பொருள் கட்டுப்பாட்டு அமைப்பினரால்** கைது செய்யப்பட்டதை சுட்டிக்காட்டி, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், அமைச்சர் இவ்வாறு கூறி உள்ளார். யுஏஇ அதிகாரிகள், மற்றும், இந்திய ஏஜன்சிகளுக்கு இடையிலான, தொடர் ஒருங்கிணைப்பு காரணமாகவே, இது சாத்தியமாகி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். போதை மருந்துக் கடத்தல் புள்ளிகள் மற்றும் இதர குற்றவாளிகளை தேடிப் பிடித்து இந்தியாவிற்கு கொண்டு வருவதற்கான **குலோபல்-ஹண்ட்** நடவடிக்கையின் கீழ், துருக்கியில் இருந்து, **முகமது சலீம் தோலா**, மலேசியாவில் இருந்து, **நவீன் சிக்கர்** ஆகியோர், ஏற்கனவே இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

## விருது

காவல், தீயணைப்பு, ஊர்க்காவல் மற்றும் சிவில் பாதுகாப்பு படையில் சிறப்பாக பணி புரிந்த, மற்றும், வீர தீரச் செயல் புரிந்த ஆயிரத்து 57 பேருக்கு மத்திய அரசு பதக்கங்களை அறிவித்துள்ளது. இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீர தீரச் செயல் புரிந்த 197 பேரும் இதில் அடங்குவர்,

## புதுச்சேரி-சுதந்தி்ம்

புதுச்சேரியில் நாளை காலை, கடற்கரை சாலையில் நடைபெறும் சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதைகளை ஏற்றுக் கொள்கிறார். சிறப்பாக பணி புரிந்த காவல்துறையினருக்கு விருது மற்றும் பதக்கங்களை அவர் வழங்குகிறார். விழாவின் போது பள்ளி மாணவ-மாணவிகளின் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற உள்ளன. விழாவை ஒட்டி விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாளை, சுற்றுலாத் துறை அமைச்சர் திரு மல்லாடி கிருஷ்ணராவ் ஏனாமிலும், குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு சிவக்

கொழுந்து, மாகேயிலும், வேளாண் அமைச்சர் திரு ராஜசேகரன் காரைக்காலிலும், தேசியக் கொடி ஏற்ற உள்ளனர்.

## புதுச்சேரி-கொடி

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று கடற்கரை சாலை காந்தி திடலில், ஹர் கர் திரங்கா கண்காட்சியை தொடக்கி வைத்தார். வீடு தோறும் மூவர்ண கொடி ஏற்றுவதை ஊக்குவிக்கும் வகையில், வந்தே மாதரம் தேசப் பக்தி பாடலின் உணர்வை கருப் பொருளாகக் கொண்டு, கலை-பண்பாட்டுத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இக்கண்காட்சியின் தொடக்க விழாவில், சட்டப்பேரவைத் தலைவர் திரு அன்பழகன், மாநிலஉள்துறை அமைச்சர் திரு நமச்சிவாயம், சட்டமன்ற உறுப்பினர் திரு விக்னேஷ் கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மூவர்ணக் கொடியுடன் படமெடுத்துக் கொள்ள, செல்பி பாய்ண்ட் வசதியும் இக்கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது.

ஹர் கர் திரங்கா தொடர்பான இதர நிகழ்வுகள் குறித்து ஒரு தொகுப்பு..........

(வாய்ஸ்)

ஹர் கர் திரங்கா இயக்கத்தின் ஒரு பகுதியாக காரைக்காலில் காவல் துறை சார்பில், உரிய பாதுகாப்புடன் இன்று நடைபெற்ற படகுப் பேரணியில், தேசியக் கொடியால் அலங்கரிக்கப்பட்ட, சுமார் 60 காவல் துறை படகுகள், சுங்கத் துறை படகுகள், மற்றும் மீன்பிடி படகுகள், கலந்து கொண்டன. அரசலாறு, மற்றும், கடற்கரைப் பகுதிகளும், மூவர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. புதுச்சேரி காவல் துறை துணைத் தலைவர் திரு சத்திய சுந்தரம், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

ஏனாமில், மை பாரத் அமைப்பினர், மற்றும் நாட்டு நலப் பணி திட்ட மாணவர்கள் இணைந்து, இன்று, ஹர் கர் திரங்கா சைக்கிள் பேரணி நடத்தினர். தொடர்ந்து ராஜீவ் ரிவர் பீச் பகுதியில், ஸ்வச்தா இயக்கப்

பணிகளிலும் இவர்கள் ஈடுபட்டனர். மண்டல நிர்வாக அதிகாரி திரு சிவராஜ் மீனா, மற்றும் இதர அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி ஜிப்மரில் இன்று நடைபெற்ற, ஹர் கர் திரங்கா வாக்கத்தான் நிகழ்வை, ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர்சிங் நேகி, கொடி அசைத்து தொடக்கி வைத்தார். ஜிப்மர் மருத்துவர்கள், ஊழியர்கள், செவிலியர்கள், மற்றும் மாணவர்கள், மூவர்ணக் கொடி ஏந்திய வண்ணம் இதில் கலந்து கொண்டனர்.

## வீ◌ாம்பட்டிணம்

வீராம்பட்டிணத்தில் இன்று நடைபெற்ற செங்கழுநீர் அம்மன் ஆலய தேர் திருவிழாவில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர் கலந்து கொண்டு தேரோட்டத்தை வடம் பிடித்து தொடக்கி வைத்தனர். புதுச்சேரி, கடலூர், விழுப்புரம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து ஏராளமான பொது மக்களும் இதில் கலந்து கொண்டு தேர் இழுத்தனர். செங்கழுநீர் அம்மன் ஆலய தேரோட்டத்தை ஆளுநர் தொடக்கி வைப்பது, பிரஞ்ச் ஆட்சிக் காலத்தில் இருந்தே, வழக்கமாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## கா□க்கால் -விழா

காரைக்காலில் கலை-பண்பாட்டுத் துறை மற்றும் தென்னக பண்பாட்டுத் துறையுடன் இணைந்து மாவட்ட நிர்வாகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள புதுச்சேரி கலை விழா நாளையும் நாளை மறுநாளும் நடைபெற உள்ளது.வேளாண் அமைச்சர் திரு ஜி என் எஸ் ராஜசேகரன் தலைமையில் நடைபெறும் தொடக்க விழாவில் கலை பண்பாட்டு துறை அமைச்சர் திரு ராஜவேலு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கலை விழாவை தொடக்கி வைக்கிறார். உள்ளுர் கலைஞர்கள் மட்டுமின்றி, குஜராத், தெலங்கானா, கேரளம் உள்ளிட்ட வெளிமாநில கலைஞர்களும் இவ்விழாவின் போது பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை வழங்க உள்ளனர். கலை நிகழ்ச்சிகள், காரைக்கால் கடற்கரை திடல், மற்றும், திருநள்ளாறு ஆங்கிலப் பூங்காவில் நடைபெறும்.

## காை□க்கால்-தீபாவளி

காரைக்காலில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, தற்காலிக பட்டாசுக் கடை உரிமம் பெற ஆன் லைன் மூலம் விண்ணப்பிக்கலாம் என அம்மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது. இன்று முதல் செப்டம்பர் 10-ஆம் தேதி வரை விண்ணப்ப ங்களை சமர்ப்பிக்கலாம் என்றும், அதற்குமேல் அவகாசம் நீட்டிக்கபடமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வானிலை

இன்று கோவை மாவட்ட மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி, தேனி, திண்டுக்கல், மதுரை, தஞ்சை,நாகை, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கடலூர் விழுப்புரம் திருவண்ணாமலை, சேலம். ஈரோடு, திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களின் ஒரு சில இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகளில் லேசான மழை இருக்கலாம் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 20-தேதி வரை மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள், மற்றும், அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக நாகப் பட்டிணத்தில் 12 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 1 சென்டிமீட்டர் மழை பெய்துள்ளது.

## கிரிக்கெட்

இந்தியா-இலங்கை அணிகளுக்கு இடையே, 2 போட்டிகள் அடங்கிய டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் முதலாவது போட்டி, இலங்கையின் கல்லே சர்வதேச விளையாட்டு அரங்கில் நாளை தொடங்கி உள்ளது. உலக டெஸ்ட் சாம்பியன் பட்டப் போட்டிகளுக்கான புள்ளிப் பட்டியலில், தற்போது இந்தியா 5-ஆவது இடத்திலும், இலங்கை 6-ஆவது

இடத்திலும் உள்ள நிலையில், இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும் முனைப்புடன், இரு அணிகளும் களம் இறங்க உள்ளன.

## கரூர்-வழக்கு

கரூர் கூட்ட நெரிசல் சம்பவத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலை வழங்குவதான தமிழக அரசின் முடிவை ரத்து செய்து சென்னை உயர்நீதிமன்றம் வெளியிட்ட உத்தரவை, இன்று உச்சநீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது. உயர்நீதிமன்ற உத்தரவினை ஆட்சேபித்து தமிழக அரசு தாக்கல் செய்த மனு மீதான விசாரணைகளின் போது, நீதிபதிகள் திரு பர்தி வாலா, திரு வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இவ்வாறு இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. துரதிருஷ்டவசமான துயர சம்பவத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வேலை வழங்குவதான அரசின் முடிவை, எவ்வாறு ஆட்சேபிக்க முடியும் என நீதிபதிகள் வினவினர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

80-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இன்று மாலை 7 மணிக்கு, வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம், நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

சுதந்திர தினமான நாளை, பிரதமர் திரு நரேந்திர மோடி டெல்லி செங்கோட்டையில் இருந்து, சுதந்திர தினக் கொண்டாட்டங்களுக்கு தலைமை ஏற்கிறார்.

புதுச்சேரியில் நாளை காலை, கடற்கரை சாலையில் நடைபெறும் சுதந்திர தின விழாவில், முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்து, அணி வகுப்பு மரியாதைகளை ஏற்றுக் கொள்கிறார்.

வீராம்பட்டிணத்தில் இன்று நடைபெற்ற செங்கழுநீர் அம்மன் ஆலய தேர் திருவிழாவை, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி ஆகியோர், வடம் பிடித்து தொடக்கி வைத்தனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்க நிறைவு பெறுகிறது.

-----------------------------